# மதுரை வண்டியூர் கண்மாய் பகுதிகளில் - பாலம் கட்டுகிற பணிகளில் முன்னுரிமை!

## சட்டப்பேரவையில் - பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு!



சென்னை, பிப்.22-

“மதுரை வண்டியூர் பகுதிகளிலும் பாலங்கள் கட்டுகிற பணிகளில் முன்னுரிமை அளிக்கப்படும்!” என சட்டப்பேரவையில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவித்தார்.

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு :-

**கோ.தளபதி:** மதுரை Apollo signal-ல் மேம்பாலம் கட்டும் பணி நீதிமன்ற வழக்கின் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. வண்டியூர் கண்மாயின் கரையோரப்பகுதிகளில் ஆழமாகவும், பலமாகவும் பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. நீர்நிலைகள் பாதிக்கப்படுவதாக நீதிமன்றம் கருதுவதாக செய்திகளைப் பார்த்தோம். ஆனால், பாதுகாப்புச் சுவர் ஏற்கெனவே இருந்த கரையைவிட உயரமாகவும், உறுதியாகவும் இருக்குமென்றும், மேம்பாலத்தினுடைய தூண்கள் சுமார் 200 மீட்டர் மட்டும்தான் கரையில் நிறுவப்படுகிறது. மற்றபடி எந்த விதத்திலும் நீர்நிலைகள் பாதிக்கப்படக்கூடாது என்றும், போக்குவரத்திற்கு மிக மிக அவசியமான மேம்பாலச்சாலையாக இருப்பதால், அதன் அவசியத்தினைக் கருத்தில்கொண்டு, நீதிமன்றத்திற்கு விளக்கமாக எடுத்துக்கூறி, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் மேம்பாலப் பணியினை விரைந்து முடிக்க முன்வருவாரா?

**அமைச்சர் எ.வ.வேலு:** நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் அடங்கிய வல்லுநர் குழுவால் பாலத்தினுடைய வரைபடம் அங்கீகரிக்கப்பட்டு, அரசின் சார்பாக நெடுஞ்சாலைத் துறைக்கு ரூபாய் 150 கோடி நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. புதிதாக அமையவிருக்கும் பாலம் வண்டியூர் கண்மாய் கரையில் அமையவிருப்பதால், தலைமைப் பொறியாளர், பொதுப்பணி, அவர்களுடைய தடையில்லாச் சான்று 10.11.2022 அன்று பெறப்பட்டு, ஒப்பந்ததாரர்கள் கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்காக ஒப்பந்தம் கோரப்பட்டு, 30.11.2022 அன்று ஒப்பந்தம் கோரப்பட்டு, முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரத்தால் அந்தப் பாலம் கட்டுகிற பணிகளைத் தொடக்கி வைத்தார்கள். தற்போது 10 சதவிகிதப் பணிகள் முடிந்துவிட்டன. ஆனால், இப்பொழுது அங்கே ஒரு பொதுநல வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் தொடர்ந்தார்கள். அதுசம்பந்தமாக, நாம் ஏற்கெனவே, 11-1-2022 சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் counter போட்டிருக்கிறோம். அதன் அடிப்படையில் வண்டியூர் கரையை மாற்றி, அதைவிட cement concrete போடுவது, மண்சரிவைத் தடுத்து நிறுத்துவது என்ற அடிப்படையிலே ஒப்பந்தங்களில் ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல் ஒரு தடையாணையை கொடுத்திருக்கிறார்கள். தடையாணையைக்கூட பார்த்தீர்கள் என்று சொன்னால் அந்த கண்மாய் பகுதிகளை மட்டும் விட்டுவிட்டு மீதிப் பாலப் பணிகளைக் கட்டுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். மீதியளவில் பாலங்கள் கட்டுகிற பணியானது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அடுத்த hearing வருகிறபொழுது, main case-ஐ எடுத்து நடத்தி, அதற்கான அனுமதியைப் பெற்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தக் கண்மாய் பகுதிகளிலும் பாலங்கள் கட்டுகின்ற பணிகளிலே முன்னுரிமை அளிக்கப்பட்டு துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.2.2024) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா மற்றும் துணை மேயர் மு. மகேஷ் குமார் ஆகியோர் பெருநகர சென்னை மாநகராட்சியின் 2024–25 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) திருமதி ஆர்.லலிதா, ஆகியோர் உள்ளனர்.

### சட்டப்பேரவையில்

# 2023 - 24 ஆம் ஆண்டுக்கான இறுதி துணை மதிப்பீடுகள்!

## நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு - தாக்கல் செய்து உரை!



சென்னை, பிப். 22-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நேற்று, நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, 2023 - 2024 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகளைத் தாக்கல் செய்து உரையாற்றினார். பின்னர், இத்துணை மதிப்பீடுகள், குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டது.

சட்டப்பேரவையில் துணை மதிப்பீடுகளைத் தாக்கல் செய்து, நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு ஆற்றிய உரை வருமாறு:

2023-2024 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். துணை மானியக் கோரிக்கையினை விளக்கிக்கூறும் விரிவான அறிக்கையினை இம்மாமன்றத்தின்முன் வைக்கிறேன். இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள இந்த துணை மதிப்பீடுகள் மொத்தம் 30,355.32 கோடி ரூபாய் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கின்றன. இதில் 26,590.09 கோடி ரூபாய் வருவாய் கணக்கிலும், 3,499.98 கோடி ரூபாய் மூலதனக் கணக்கிலும், 265.25 கோடி ரூபாய் கடன் கணக்கிலும் அடங்கும்.

2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9 ஆம் நாளன்று 2023-2024 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் “புதுப் பணிகள்” மற்றும் “புது துணைப் பணிகள்” குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவது இத்துணை மதிப்பீடுகளின் முக்கிய நோக்கமாகும்.

துணை மதிப்பீடுகளில் கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படும் சில முக்கிய இனங்கள் பின்வருமாறு:

மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்திற்கு இழப்பீட்டு நிதியாக 15,593.95 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மானியக் கோரிக்கை எண் 51-இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலுள்ள குடும்பங்களுக்கு ரொக்க நிவாரண உதவியாக 1,486.93 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கை எண் 51-இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, எதிர்பாராத தொடர் மழைப்பொழிவு மற்றும் வெள்ளப்பெருக்கால் தென் மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங் களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரொக்க நிவாரண உதவியாக 541.37 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மானியக் கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்கு கூடுதல் செலவினமாக 1,055.34 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் அவர்களே, 2023-2024 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

இவ்வாறு - நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு உரையாற்றினார்.

இத்துணை மதிப்பீடுகளுக்கு, சட்டமன்றப் பேரவை, குரல் வாக்கெடுப்பு மூலம் அனுமதி அளித்தது.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை! எம்.ஸ்ரீதரன் முன்னிலை! சைதை மேற்கு பகுதி துணைச் செயலாளர்

# கவிதா கவுதமன் இல்ல மணவிழா! கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைக்கிறார்!

## தயாநிதி மாறன் எம்.பி. - தமிழச்சி தங்கப் பாண்டியன் எம்.பி. - எம்.கிருஷ்ணமூர்த்தி - இரா.துரைராஜ் பங்கேற்பு!

சென்னை, பிப். 22-

சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்குப் பகுதி துணைச் செயலாளர் கவிதா கவுதன், சைதை மேற்குப் பகுதி தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.தீபன் இல்ல திருமண விழா இன்று (22.2.2024 - வியாழக்கிழமை காலை 8 மணியளவில், மேற்கு மாம்பலம், வெற்றி கிருஷ்ணன் மஹாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவிற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார்.

வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் முன்னிலை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைராஜ் மற்றும் சைதை மா.அன்பரசன், ஆர்.என் துரை, த.பாபு, எம்.சுரேஷ்குமார், சைதை த.சம்பத், ந. தமிழரசு, கு.புகழ்வேந்தன், ஜி.பாபு, எஸ்.ஆனந்தன், ஜி.ஜே.மோசஸ், ஆ.கவிராஜ் ஆகயோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இம்மணவிழாவை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைத்து மணமக்கள் க.முகேஷ் - வெ. உஷா ஆகியோரை வாழ்த்துகின்றனர்.



இம்மணவிழாவில் தயாநிதி மாறன் எம்.பி., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ., எஸ். அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., மயிலை த.வேலு எம்.எல்.ஏ., நே.சிற்றரசு, ஜெ.கருணாநிதி எம்.எல்,ஏ., ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ., எஸ்.அம்பேத்குமார் எம்.எல்.ஏ., க.தனசேகரன், க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், வட சென்னை ந.மனோகரன், வேளச்சேரி எஸ்.பாஸ்கர், வாசுகி பாண்டியன், சைதை சம்பத், ரத்னா லோகேஸ்வரன், துரை கபிலன், கே.கண்ணன், மு.ராசா, சு.சேகர், எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், நொளம்பூர் வே.ராஜன், துரை வீரமணி, ஜி.வெங்கடேசன், வி.ஏழுமலை, நந்தனம் மதி, எஸ்.முரளி, மின்னல் கந்தப்பன், எம்.கே.ஏழுமலை, ப.ரவி, உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜன், ஆர்.பாலசுந்தரம், பி.ஜே.பாஸ்கர், எஸ்.ஏ. அரிகிருஷ்ணன், பி.எஸ். முருகேசன், வீர.கனிமொழி, த.பஷீர், வ.செல்வக்குமார், எம்.விநாயக மூர்த்தி, ஆர். கிருஷ்ணகுமார், ச.சங்கர் கணேஷ், ஜெ.கி.பாண்டியன், கா.வீ.தியாகராஜன், கோட்டூர் எஸ்.பிரகாஷ், செ.ரவி, சைதை சாதிக், அஞ்சல் என். ராமன், கழக ரமேஷ், நா.மணிகண்டன், ஹரி பாபு, பா.அருண்குமார், ஆர்.சசிகுமார், சி.பரிமேலழகர், கனிமொழி தனசேகரன், நிஷா சையத் மற்றும் பலர் கலந்துகொண்டு வாழ்த்துகின்றனர்.

க.தீபன் நன்றி கூறுகிறார்.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.
சார்பில்
மக்கள் முதல்வரின்
மனிதநேயத் திருவிழா

சூரியச் சுடர் 1
எல்லோரையும் இணைக்கும்
20 இணைகளுக்கு மணவிழா

நாள் : 22.02.2024 வியாழக்கிழமை காலை 8 மணி
இடம் : ஒய்.எம்.சி.ஏ. ஹால், ரித்தர்டன் சாலை, டவுட்டன்.

தலைமை
வி.சுதாகர் எழும்பூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர்

முன்னிலை
பி.கே.சேகர்பாபு
சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர்
மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்
தயாநிதிமாறன்
நாடாளுமன்ற உறுப்பினர்
கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர்

சொ.வேலு, கோ.ஏகப்பன், புனிதவதி எத்திராசன் எம்சி, பா.ஸ்ரீராமுலு,
கே.எஸ்.எம்.நாதன், ராஜேஸ்வரிஸ்ரீதர். அ.நிர்மலாதேவி,
பரிதிஇளம்சுருதி, எல்.சுந்தர்ராஜன் எம்.சி. பாத்திமா முசாஃபர்

20 இணைகளுக்கு சீர்வரிசையுடன்
திருமணத்தை நடத்தி வைப்பவர்
எ.வ.வேலு
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

மேயர் பிரியாராஜன், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. ப.தாயகம்கவி எம்.எல்.ஏ.
ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ.
ப.ரங்கநாதன், ஓ.ஏ.நாகலிங்கம்
நன்றியுரை : வி.விஜயகுமார் 58 வட்ட கழகச் செயலாளர்




அன்புடன்
58, 58 அ வட்ட தி.மு.க. எழும்பூர் தெற்கு பகுதி - சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.